[1994 மே 5

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் வீரம் மிக்க, உணர்ச்சியைக் கிளரும் உரையில், மாநிலங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி மிகச் சிறப்பாக குறிப்பிட்டிருந்தார்கள். 1998-ல் நமது தமிழ்நாடு, இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத அளவிற்கு அனைவருக்கும் கல்வி வழங்கப்படும் என்று தெரிவித்து ஏறத்தாழ பெரிய ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து இன்றைக்கு 2000.46 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டில் அந்தப் பள்ளிக்கூடத்தை உருவாக்க அனைத்து நடைமுறைகளையும், சட்ட திட்டத்திற்கு உட்பட்டு நீங்கள் சொல்லுகின்ற தேவைகளை எல்லாம் நாங்கள் செய்து வைத்திருக்கிறோம். ஆனால் அந்த ஒரு ஏக்கர் நிலத்தை அரசு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் நிலம் பற்றிய பிரச்சினையை நிச்சயமாக ஆய்வு செய்யும். ஆனால் அரசு மேல்நிலைப் பள்ளியாக அதை உயர்த்துவதற்கு பகுதி-2 திட்டத்தில் தான் நிதி ஒதுக்கீடு இருக்கிறது. நிதியின் அடிப்படையில் அது ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 537, **டாக்டர்** ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு கல்வி **அமைச்சர்.**

537—

ஆரணி தொகுதி, ரகுநாதபுரத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துதல்

*21757—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, ரகுநாதபுரம் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

1994 மே 5]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 600-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் தினமும் ரகுநாதபுரம் கிராமத்திலிருந்து உயர் நிலைப் பள்ளியில் பயிலுவதற்காக 6 கிலோ மீட்டரில் இருக்கின்ற ஆரணி நகருக்கு வருகிறார்கள். அந்தக் கிராமத்திற்கு நான் சென்றபோது அங்கே இருக்கின்ற மாணவ மாணவியர்களின் பெற்றோர்களும் அந்த ஊரிலே இருக்கின்ற பொதுமக்களும் பெரிய கோரிக்கையாகச் சொல்வது எங்கள் கிராமத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளியைப் பெற்றுத் தாருங்கள் என்பதாகும். அதை அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து உயர்நிலைப் பள்ளியை நிறுவ ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரகுநாதபுரம் கிராமத்தில் ஒரு தொடக்கப் பள்ளி மட்டும்தான் இருக்கிறது. அருகிலே ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் சேனூர் என்ற ஊரிலும், 3 கிலோ மீட்டர் தூரத்தில் அக்கரைபாளையம் என்ற ஊரிலும் 4 கிலோ மீட்டர் தூரத்தில் ராட்டினமங்கலம் என்ற ஊரிலும் நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. 4 கிலோ மீட்டர் தூரத்தில் குன்றத்தூரில் அரசு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. முதலிலே நடுநிலைப் பள்ளியாக உயர்த்தினால் தான் வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் வாய்ப்பை உருவாக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளியாக உயர்த்துவதற்குத் தேவையான வாய்ப்புகளை உருவாக்கித் தந்தால் விரைவிலே அதை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி – 2 திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியின் அடிப்படையிலும் தகுதியின் அடிப்படையிலும் இது ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.